# கன்னியாகுமரி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின்
# 2023-2024 ஆம் நிதியாண்டிற்கான அறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன் படி கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.220/புமசு/2017-1, நாள் 19.09.2017-ன்படி கன்னியாகுமரி மாவட்ட கனிம அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளை பத்திரமானது 24.09.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண் BK.IV-211/2017, நாள் 24.09.2017-ன் படி நாகர்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | நிர்வாகக் குழு அமைப்பு | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் - தலைவர் | மாவட்ட ஆட்சியர் - தலைவர் |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர் - உறுப்பினர் செயலர் | மாவட்ட வருவாய் அலுவலர் - துணைத்தலைவர் |
| 3 | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை - ஒருங்கிணைப்பாளர் | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை - ஒருங்கிணைப்பாளர் |
| 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை - உறுப்பினர் | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை - உறுப்பினர் |
| 5 | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் - உறுப்பினர் | மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) - உறுப்பினர் |
| 6 | முதன்மைக் கல்வி அலுவலர் - உறுப்பினர் | உதவி இயக்குநர் (ஊரக வளர்ச்சி) - உறுப்பினர் |
| 7 | மாவட்டக் கருவூல அலுவலர் - உறுப்பினர் | உதவி இயக்குநர், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் - உறுப்பினர் |
| 8 | மாவட்ட சமூக நல அலுவலர் - உறுப்பினர் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் - உறுப்பினர் |
| 9 | உதவி இயக்குநர், (ஊராட்சிகள்) - உறுப்பினர் | மாவட்ட வன அலுவலர் - உறுப்பினர் |
| 10 | திரு.T.ஐயப்பன், த/பெ.தம்புரான், துவரங்காடு, பூதப்பாண்டி - அலுவலகம் சாரா உறுப்பினர் | முதன்மைப் பொறியாளர், பொதுப்பணித்துறை - உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 11 | திரு.C.ஜெய பேரின்பகுமார், ராமவர்மபுரம், நாகர்கோவில் - அலுவலகம் சாரா உறுப்பினர் | உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை - உறுப்பினர் |
| 12 | | மாவட்ட கருவூல அலுவலர் - உறுப்பினர் |
| 13 | | மாவட்ட சமூக நல அலுவலர் - உறுப்பினர் |
| 14 | | துணை இயக்குநர், (பொது சுகாதார மையப் பொறுப்பாளர்) சுகாதாரப் பணிகள் - உறுப்பினர் |
| 15 | | திரு.R.அருள்கண்ணன், ரோஜாவனம் நிறுவனம், நாகர்கோவில் - அலுவலகம் சாரா உறுப்பினர் |
| 16 | | Dr.E.ஜேம்ஸ் R. டேனியல், நாகர்கோவில். |

2) கன்னியாகுமரி மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக பாரத மாநில வங்கி கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண் 37232889842) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

3) கன்னியாகுமரி மாவட்டத்தில் 3 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும், 12 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள், 2017-ன் படி 12.01.2015-க்கு முன்பாக வழங்கப்பட்ட குத்தகைக்கு கனிமத்தின் உரிமைக்கட்டணம் முப்பது சதவீதமும் (30%) 12.01.2015 அன்று மற்றும் அதற்கு பின்பு வழங்கப்பட்ட குத்தகைக்கு கனிமத்தின் உரிமை வரியில் பத்து சதவீதமும் (10%) மாவட்ட கனிம அறக்கட்டளைக்கு செலுத்தப்பட வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ள 3 பெருங்கனிம உரிமங்களும் 12.01.2015-க்கு முன்பாக வழங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மேலும் அனுமதி வழங்கப்பட்டுள்ள 12 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

4) கன்னியாகுமரி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.3.2024 வரை ரூ.12,05,64,906/- (ரூபாய் பன்னிரெண்டு கோடியே ஐந்து இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து ஆறு மட்டுமே) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

5) 2018-19, 2019-20, 2020-21, 2021-22 மற்றும் 2022-23 ஆம் நிதியாண்டில் கன்னியாகுமரி மாவட்ட கனிம அறக்கட்டளையின் மூலமாக 107 திட்டங்களுக்கு ரூ.4,54,79,239/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| வருடம் | திட்டத்தின் எண்ணிக்கை | திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 2018-19 | 88 | 3,01,47,639 |
| 2019-20 | 9 | 27,26,980 |
| 2020-21 | 5 | 68,06,620 |
| 2021-22 | 2 | 22,00,000 |
| 2022-23 | 3 | 35,98,000 |
| **மொத்தம்** | **107** | **4,54,79,239** |

**நிர்வாக செலவுகள்: 2023-24**

| **Sl. No.** | **Administrative Expenses details** | **Expenditure amount in Rs.** |
|---|---|---|
| 2. | District Mineral Foundation Trust release to the appointment of Data Entry Operator and Accountant salary from DMFT account | 3,51,121 |
| 3. | CCTV cameras installed at 20 locations in Kanniyakumari District. Central Monitoring Unit installed at the Office of the Deputy Director of Geology and Mining, Kanniyakumari – providing of Broadband connectivity. | 82,576 |
| | **Total** | **4,33,697** |

19/07/24

தலைவர்/ மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட கனிம அறக்கட்டளை,
கன்னியாகுமரி.

18.7.24